# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
# செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 2.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் பண்புடையதும்; மருத்துவத் தன்மைகளை கொண்டதும்; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டதும்; அழகை அதிகரித்து இளமையை தக்க வைக்கும் குணமுடையதுமான புழக்கத்தில் இருந்த பாரம்பரிய வேளாண் பொருட்கள் வழக்கொழிந்து போவது வேதனைக்குரிய ஒன்றாகும்.

நவீனப் பொருட்களின் ஆதிக்கம் காரணமாக, பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை, இன்றியமையாத் தன்மையை பெரும்பாலான மக்கள் உணராமல் உள்ளனர்.

பண்டைக் காலத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய வழக்கத்தில் இருந்த வேளாண் பொருட்களில் முக்கியமானதாக இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவை விளங்கின.

இளநீரை எடுத்துக் கொண்டால், அதில் பொட்டாசியம், சோடியம், மக்னீசியம், கால்சியம், இரும்புச் சத்து ஆகியவை அதிக அளவில் உள்ளன. இது மட்டுமல்லாமல், உடலுக்கு குளிர்ச்சியை ஊட்டவும்; ஜீரண சக்தியை மேம்படுத்தவும் இளநீர் பயன்படுகிறது. இளநீர் பருகுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மற்றொரு வேளாண் பொருளான சீயக்காய், கூந்தலின் ஆரோக்கியத்தை பேணிக் காக்கவும்; கூந்தலின் வளர்ச்சியை மிருதுவாக்கவும்; கூந்தலில் ஏற்படும் பொடுகைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

இதே போன்று, மற்றொரு பாரம்பரிய வேளாண் விளை பொருளான பருத்தி, ஆடை நெய்வதற்கான முக்கிய மூலப் பொருளாக விளங்குகிறது. பருத்தி ஆடைகள் கோடையில் நிலவும் கடும் வெப்பத்தையும்; பனிக் காலங்களில் நிலவும் கடும் குளிரையும் தாங்கவல்லதாகவும்; சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பானதாகவும்; சருமப் பராமரிப்பிற்கு ஏற்றதாகவும் விளங்குகிறது.

இது போன்ற பல பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும்; பாரம்பரிய பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையிலும்; வழக்கொழிந்து போன பாரம்பரிய பொருட்களை புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும்; இயற்கையின் படைப்பினை பயன்படுத்தி மக்களின் நலத்தினை பேணிப் பாதுகாக்கும் வகையிலும்; விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும்; பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவிலான கருத்தரங்கங்கள்; விழிப்புணர்வுப் பேரணிகள்; வானொலி விளம்பரப் பாடல்கள்; "இளநீர் குடியுங்கள்; உடல் நலம் பேணுங்கள்" போன்ற மக்களை கவரும் வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள்; கருத்துக் கண்காட்சிகள்; திரையரங்கு விளம்பரங்கள்; பத்திரிகை விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******